கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 164/2012

பிரதிவாதி தரப்பு சாட்சி –2 சின்னத்துரை திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 18.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**9 முதல் 16 வரையான பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை**

1. எனது வழக்கறிஞர் பெயர் என்ன என்றால் திரு.ஜாபர் சேட் ஆகும். எனது வழக்கறிஞர் எனக்காக வக்காலத்து தாக்கல் செய்து எனக்காக முன்னிலையாகியுள்ளார் என்றால் சரிதான். தற்போது எனக்கு யார் வழக்கறிஞர் என்றால் தெரியவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்தது என்றால் வழக்கறிஞர் திரு.ஜாபர் சேட் தயார் செய்தார். ஏற்கனவே இவ்வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதலில் சாட்சியம் அளித்த போது எனக்காக முன்னிலையாகிய வழக்கறிஞர் யார் என்றால் நியாபகம் இல்லை. இவ்வழக்கின் வாதி யார் என்று தெரியுமா என்றால் தெரியும். அருணாச்சலம் என்பவர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தது என்றால் அருணாச்சலம் அழைத்து வந்தார். இறந்து போன ராஜமணியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராஜமணி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தாயாரின் சின்னம்மா ஆவார். அருணாச்சலம் எனக்கு என்ன உறவு முறை என்றால் தாய் மாமா ஆகும். எனது தாயார் அருணாச்சலத்தின் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். அருணாச்சலம் மற்றும் பாப்பாத்திக்கு மற்றொரு சகோதரர் உள்ளாரா என்றால் குழந்தைவேல் என்பவர் இருந்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை. ராஜாமணியின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அவர் பெயர் மாணிக்கம். மாணிக்கம் எப்போது இறந்தார் என்றால் அது பற்றி தெரியாது.

3. அருணாச்சலம் இறந்தது எப்போது என்றால் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு இறந்தார். அருணாச்சலம் இறந்த தேதி பற்றி எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து சம்மந்தமாக பொய்யான வாரிசு சான்றிதழ் பெற்று பிரச்சனை ஏற்பட்டதின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ராஜாமணியின் பெற்றோரை தெரியுமா என்றால்

தெரியும். அவர்களை நான் பார்த்துள்ளேனா என்றால் ராஜாமணியின் தாயார் நல்லம்மாளை மட்டும் பார்த்துள்ளேன். நல்லம்மாள் எப்போது இறந்தார் என்றால் தெரியாது. நல்லாகவுண்டர் தாய் மற்றும் தந்தை யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ராஜாமணி எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியும். 2012 ம் வருடம் இறந்தார்.

4. தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அருணாச்சலத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். எதன் அடிப்படையில் அருணாச்சலத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் ராஜாமணியின் வாரிசு என்ற அடிப்படையில் அருணாச்சலத்திற்கு பாத்தியப்பட்டதாகும். ராஜாமணியின் கணவரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ராஜாமணி கணவர் இறந்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் அது பற்றி தெரியாது. நான் இந்த வழக்கில் கற்பனையான சங்கதிகளை வைத்து வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றும், அருணாச்சலத்தின் மகன் தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றும், எனது வழக்கறிஞருக்கும், இவ்வழக்கின் வழக்கறிஞருக்கும் சம்மந்தம் இல்லாத நிலையில் இந்த வழக்கறிஞர் வாதிக்கு ஆதரவாக ஆவணங்களை எனது மூலம் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

5. இவ்வழக்குடன் தொடர்புடைய மற்றொரு வழக்கு உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி வழக்கறிஞர் வாதிக்கு ஆதரவாக வாக்குமூலத்தை தயார் செய்து எனது மூலம் தாக்கல் செய்துள்ளார் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிலும், இதனுடன் தொடர்புடைய வழக்கிலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**